

## 1:1:1ஈமான் பற்றித் தெளிவு பெறுவோம்

- நம்பிக்கை, விசுவாசம் என்பதே ஈமான் என்பதன் பொருள்.
- அரபியில் இதனை அகீதா, தௌஹீத் என்று கூறுவர்.
- இஸ்லாத்தின் அடிப்படை அகீதாவாகும்.
- நாம் புரியும் கிரியைகள் அங்கீகரிக்கப்பட அகீதாவே மிகப் பிரதானமாகும்.

மனிதர்கள் தாம் நம்பும் விடயங்களில் உறுதியும், பற்றும் கொள்கின்றனர். இதனை நாம் அவரவர் நம்பிக்கை, அல்லது கொள்கை என்கிறோம். மனிதன் விசுவாசிப்பது அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் அமையும் போது அது சரியான நம்பிக்கை என்கிறோம். இவ்வாறு அல்லாஹ்வுடன் தொடர்புபட்ட இந்த நம்பிக்கைக் கோட்பாடுகளே ''அகாஇத்'' என வழங்கப்படும்.

ஒரு முஸ்லிம் எவற்றை விசுவாசிக்க வேண்டுமென்பதை இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளது. ஒரு முறை ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன் மனித உருவில் தோன்றினார்கள். அவ்வேளை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களோடு உரையாடிக் கொண்டிருந்தார்கள். அங்கு தோன்றிய ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விசுவாசம் (ஈமான்) கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பின்வருமாறு கூறினார்கள்:

: ( الإيمَانُ أَنْ تُؤْمِنَ بِاللَّهِ وَمَلاَئِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ وَاليَومِ الآَخِرِ وَتُؤْمِنَ بِالقَدَرِ خَيرِهِ وَشَرِّهِ ) رواه مسلم.

“ஈமான் என்பது அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும், இறுதி நாளையும், நன்மை தீமைகள் அனைத்தும் அல்லாஹ் நாடிய பிரகாரமே நடைபெறும் என்பதையும் (கழாகத்ர்) நம்பிக்கை விசுவாசம் கொள்வதாகும்” என்றார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

இந்த ஆறு அம்சங்களும் ‘அர்கானுல் ஈமான்’ எனப்படுகின்றது. இவ்வாறு விசுவாசிப்பதைச் சுருக்கமான விசுவாசம் (ஈமான் முஜ்மல்) எனவும், ஒவ்வொன்றையும் விரிவாக விசுவாசிப்பதை விரிவான ஈமான் (ஈமான் முபஸ்ஸல்) எனவும் கூறப்படும். இவ்வாறு விசுவாசம் கொண்டவனை ‘மு.்.மின்’ என்கிறோம்.

## பயிற்சிகள்

### சுருக்க விடை தருக

1. இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
2. அர்கானுல் ஈமான் எனப்படுவது யாது?
3. ஈமானுடைய அம்சங்களைக் கேட்டறிய மனித உருவில் தோன்றிய மலக்கின் பெயர் யாது?
4. ஈமான் முஜ்மல், ஈமான் முபஸ்ஸல் என்பதன் விளக்கம் யாது?



இலவச விநியோகத்திற்காக

## 1.2.1 அல்லாஹ்

- நாம் காணும் பொருட்கள் அல்லாஹ்வின் வல்லமைக்குச் சான்று பகர்கின்றன.
- அவனுக்கு ஒப்பாக எப்பொருளும், எதுவும் இருக்க முடியாது.
- அவன் தனித்தவன், இணை துணை அற்றவன்.
- அத்தகையவனே வணக்கத்துக்குரியவனாக முடியும்.

முஸ்லிமின் செயல்கள் யாவும் அவனது நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைகின்றன. இஸ்லாம் என்பது நம்பிக்கையும், அதை அடியொட்டிய செயற்பாடும் ஆகும். இந்த வகையில் மிகப் பிரதானமான நம்பிக்கையாக அல்லாஹ்பற்றிய நம்பிக்கை அமைகின்றது.



அல் - குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

"வானங்களையும், பூமியையும் படைத்து மேகத்திலிருந்து மழையைப் பொழியச் செய்பவன் யார்? நாமே அதன் மூலம் கண்ணைக் கவரும் அழகான தோட்டங்களை முளைக்கச் செய்கிறோம். நம் உதவியின்றி அதன் மரங்களை உங்களால் முளைப்பிக்க முடியாது. ஆகவே அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்துக்குரியவன் இருக்கிறானா? இல்லை. இவ்வாறிருந்தும் அவர்கள் ஏனையவைகளோடு அல்லாஹ்வை சமப்படுத்துகின்றனர். பூமியை ஒரு நிலையான இடமாக அமைத்து அதன் மத்தியில் ஆறுகளையும், நிலையான மலைகளையும் அமைத்தவன் யார்? இரு சமுத்திரங்களுக்கிடையில் தடுப்பை ஏற்படுத்தியவன் யார்? இவைகளைச் செய்த அல்லாஹ்வோடு வணக்கத்துக்குரிய வேறொருவன் இருக்கிறானா? அவர்களில் பெரும்பாலோர் இதனையும் அறியாதவர்களாகவே உள்ளனர்."

(அல்குர்ஆன் அத்தியாயம் 27: வசனம் 60,61)



இலவச விநியோகத்திற்காக

உலகைப் படைத்துப் பரிபாலிப்பவனே அல்லாஹ். அவன் தனித்தவன், இணை துணையற்றவன். அவன் யாருக்கும் பிள்ளையாகப் பிறக்கவுமில்லை, யாரையும் அவன் பெற்றெடுக்கவுமில்லை. எவருக்கும் அவன் ஒப்பானவனாகவும் இல்லை.

குறைஷிகளில் சிலர் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து எம்மைப் படைத்தவன் எப்படிப்பட்டவன் எனக் கேட்டார்கள். அப்பொழுது அல்லாஹ் பின்வரும் ஸூறாவை இறக்கினான்:




“நபியே! (நீர் மனிதர்களை நோக்கிக்) கூறுவீராக! அல்லாஹ் ஒருவனே. அவன் எவ்வித தேவையுமற்றவன் (எல்லாப் படைப்புக்களும் அவன் பக்கம் தேவையுள்ளவை). அவன் எவரையும் பெறவுமில்லை; எவராலும் அவன் பெறப்படவும் இல்லை; அவனுக்கு ஒப்பாக எவருமே இல்லை.” (112: 1-4)

இந்த அத்தியாயம் ‘ஸூரதுல் இக்லாஸ்’ எனப்படுகிறது. இது ஏகத்துவம் எனப்படும் தவ்ஹீதின் அடித்தளம் பற்றிப் பேசுகின்றது. உலகையும் அதிலுள்ள மனிதர்கள், ஏனைய ஜீவராசிகள் முதலான அனைத்தையும் படைத்த அவனே வணக்கத்துக்குரியவன்.

அவனுக்கு தொண்ணூற்றொன்பது திருநாமங்கள் உள்ளன. அவை ‘அல் அஸ்மாஉல் ஹுஸ்னா’ அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள் எனப்படுகின்றன. அவை அவனுக்கே சொந்தமானவை. அதில் எவரும் பங்கேற்க முடியாது. இதனை விளங்கி ஈமான் கொள்ளவேண்டும். அல்லாவிடில் நாம் தவறிழைத்துவிட நேரிடும். அல்லாஹ்வின் திருநாமங்களை நாமாக எவருக்கும் பயன்படுத்தலாகாது. அப்படி விரும்பினால் அல்லாஹ்வின் அடிமை (அப்து) எனப் பொருள்படும்வண்ணமே கூற வேண்டும்.

அல்லாஹ்வுக்கு 99 திருநாமங்கள் இருப்பது போலவே **“ஸிபத்துக்கள்”** எனப்படும் பண்புகளும் உள்ளன. அவை அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் கூறப்பட்டுள்ளன. அவற்றை நாம் விசுவாசிக்க வேண்டும்.

அல்லாஹ்வின் பண்புகள் பற்றிய சில அல்குர்ஆன் வசனங்கள்.

وَتَوَكَّلْ عَلَى الْحَيِّ الَّذِي لَا يَمُوتُ وَسَبِّحْ بِحَمْدِهِ

“மரணிக்காத அல்லாஹ் மீது உமது காரியங்களை பொறுப்புச் சாட்டிவிடு. மேலும் அவன் புகழ் கொண்டு அவனைத் தூய்மைப்படுத்து.”

(25:58) وَهُوَ الَّذِي خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ بِالْحَقِّ

“மேலும் வானங்களையும், பூமியையும் உண்மையாகவே படைத்தவன் அவனே.” (6:73)

وَكَلَّمَ اللَّهُ مُوسَىٰ تَكْلِيمًا

“அல்லாஹ் மூஸா நபியுடன் உறுதியாகப் பேசினான்.” (4.164)

وَأَنَّ اللَّهَ قَدْ أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا

“நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் தன் அறிவால் சூழ்ந்து அறிந்துள்ளான்.” (65:12)

إِنَّ اللَّهَ هُوَ الرَّزَّاقُ ذُو الْقُوَّةِ الْمَتِينُ

“நிச்சயமாக அல்லாஹ்தான் மிக்க உணவளிப்பவன் பலமுடையவன் உறுதியானவன்.”

وَهُوَ الْفَتَّاحُ الْعَلِيمُ (51:58)

“அவனே தீர்ப்பளிப்பவன்; யாவையும் நன்கறிந்தவன்.”

(34:26)

قَالَ لَا تَخَافَا إِنَّنِي مَعَكُمَا أَسْمَعُ وَأَرَىٰ

“நீங்கள் இருவரும் பயப்படாதீர்கள். நிச்சயமாக நான் (மூஸா, ஹாரூன் ஆகிய) உங்களிருவருடனும் கேட்டுக்கொண்டும், பார்த்துக் கொண்டுமிருக்கிறேன்” எனக் கூறினான் (20:46)

وَلَوْ شَآءَ اللّٰهُ مَا اقْتَتَلَ الَّذِيْنَ مِنْ
بَعْدِهِمْ مِّنْ بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ

“இன்னும் அல்லாஹ் நாடியிருந்தால் அவர்களுக்குப் பின்னுள்ளவர்கள் தங்களிடம் தெளிவான அத்தாட்சி வந்த பிறகும் சண்டையிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள்.” (2 253)

لَيْسَ كَمِثْلِهٖ شَیْءٌ ۚ وَهُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ ﴿١١﴾

“அவனைப் போல எப்பொருளும் இல்லை. அவனே கேட்போனும், பார்ப்போனும் ஆவான்.” (42:11)

## அல்லாஹ்வின் மலக்குகள்

அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுபவர்களே மலக்குகளாவர். அவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டவர்கள். நாய், பன்றி தவிர்ந்த ஏனைய உருவங்களிலும் தோன்ற முடிந்தவர்கள். அவர்களுக்கு ஊண், உறக்கம், மறதி, மயக்கம் என்பன கிடையாது. எப்போதும் அல்லாஹ்வை “தஸ்பீஹ்” செய்வதில் ஈடுபட்டிருப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு முஸ்லிமும் ஈமான் கொள்ள வேண்டும். அவர்களுள் சிலரின் பொறுப்புக்கள் வருமாறு:

1- அர்ஷைச் சுமக்கிறவர்கள்.
2- வஹீ எடுத்துச் செல்பவர்கள்.
3- சுவனத்தின் பொறுப்புக்குரியவர்கள்.
4- நரகின் பொறுப்புக்குரியவர்கள்.
5- மனிதர்களை மாறி மாறிப் பாதுகாக்கும் பொறுப்புடையவர்கள்.
6- வயிற்றில் உண்டாகும் கருவோடு சம்பந்தப்பட்டவர்கள்.
7- உயிரைக் கைப்பற்றுபவர்கள்.
8- ஸூர் ஊதுபவர்கள்.
9- கப்றில் கேள்விக்கணக்குக் கேட்பவர்கள்.
10- நன்மை தீமைகளைப் பதிவு செய்பவர்கள்.

அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ் ஒருவனே அறிவான். ஆண்களோ, பெண்களோ அல்லாத அவர்களுக்கு இறக்கைகள் உண்டு. “அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் வானங்களையும், பூமியையும் ஆரம்பமாகப் படைத்தவன்; இரண்டிரண்டு, மும்மூன்று, நன்நான்காக இறக்கைகளையுடைய மலக்குகளைத் தூதர்களாக ஆக்கியவன். அவன் நாடியதைத் தன் படைப்பில் அதிகப்படுத்துவான். நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருள் மீதும் ஆற்றலுடையோனாவான்.”

(அல்குர்ஆன்- 35:01)



இலவச விநியோகத்திற்காக

## பயிற்சிகள்
### விடை தருக

1. ஸூரத்துல் இஹ்லாஸ் எதைப் பற்றிக் கூறுகிறது?

2. "எல்லாப் படைப்புக்களும் அல்லாஹ்வின் பால் தேவையுடையவனாக உள்ளன" என்ற பொருளைத் தரும் குர்ஆன் வசனம் எது?

3. "அல் அஸ்மாஉல் ஹுஸ்னா" என்பதன் பொருள் என்ன?

4. மலக்குகளில் முக்கியமான சிலரின் பெயர்களைக் கூறுக.

5. மலக்குகளின் பண்புகள் சிலவற்றைக் கூறுக.

## 1.3.1 அல்லாஹ்வின் தூதர்களை நம்புவோம்

- ✶ அல்லாஹ்வின் கட்டளைகளை எத்திவைப்பதற்காக மனிதர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களே இறைத் தூதர்கள் ஆவர்.
- ✶ அவர்கள் நபிமார்கள், றஸூல்மார்கள் என அழைக்கப்படுவார்கள்.
- ✶ மனிதர்களுக்கு வழிகாட்ட அனுப்பப்பட்ட நபிமார்கள் ஓர் இலட்சத்துக்கு மேட்பட்டோராவர்.
- ✶ நபிமார்களில் முதலாமவர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் எனவும், இறுதியானவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனவும் நம்ப வேண்டும்.
- ✶ முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு நபித்துவம் முற்றுப்பெற்றுவிட்டது.

நாம் ஈமான் (விசுவாசம்) கொள்ள வேண்டிய விடயங்களில் ரஸூல்மார்களைப் பற்றிய ஈமானும் ஒன்றாகும். அவர்களே அல்லாஹ்விடமிருந்து மக்களுக்கு நேர்வழியைக் கொண்டுவந்தவர்கள். அவர்களை அல்லாஹ்வின் தூதர்களெனன நம்பிக்கை கொண்டு அவர்கள் கொண்டுவந்த வேதத்தையும் விசுவாசிப்பது கடமையாகும். அவர்கள் எல்லோரும் ஆண்களாவர்.

كَانَ النَّاسُ أُمَّةً وَّاحِدَةً فَبَعَثَ اللّٰهُ النَّبِيّٖنَ
مُبَشِّرِيْنَ وَمُنْذِرِيْنَ وَاَنْزَلَ مَعَهُمُ الْكِتٰبَ
بِالْحَقِّ لِيَحْكُمَ بَيْنَ النَّاسِ فِيْمَا اخْتَلَفُوْا فِيْهِ

"(ஆரம்பத்தில்) மனிதர்கள் (யாவரும்) ஒரே சமுதாயத்தவராகவே இருந்தனர். பிறகு (நன்மை செய்வோருக்கு) நன்மாராயம் சொல்லக்கூடியவர்களாகவும் (தீமை செய்வோருக்கு), எச்சரிக்கை செய்யக்கூடியவர்களாகவும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பிவைத்தான். மேலும், இம்மனிதர்களிடையே அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தவற்றில் தீர்ப்புச் செய்வதற்காகச் சத்தியத்தைக் கொண்டுள்ள வேதத்தையும் இறக்கியருளினான்." (அல் குர்ஆன் 2.213)



இலவச விநியோகத்திற்காக